2nd August 1965]

Transfer of Panchayat Union School Teachers

* 28 *Q.*—SRI M. RAJAH IYER: Will the Hon. the Minister for Local Administration be pleased to state the rules or norms under which the teachers in Panchayat Union Schools are transferred?

THE HON. SRI S. M. A. MAJID: இது சம்பந்தப்பட்ட விளக்க உரையின் நகல் [a] ஒன்று சட்டமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கிறது.

SRI M. RAJAH IYER: Will the Government make sure that, where husbands and wives are both teachers, ordinarily they are not disturbed—because the teacher-couple would make an effective team of teachers—unless there are very exceptional reasons, and that they are retained in the same place?

THE HON. SRI S. M. A. MAJID: If particular cases are brought to the notice of the Government, they will be looked into.

திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி: சர்க்கார் இப்போது கொண்டு வந்திருக்கும் முறையைப் பாராட்டுவதோடு, இதே முறையை டிஸ்ட்ரிக்ட் போர்டு உயர்தரப் பள்ளிகளுக்கு அமல் நடத்த முடியுமா என்பதை சர்க்கார் பரிசீலிக்குமா என்று கேட்கிறேன்.

கனம் திரு. எஸ். எம். ஏ. மஜீத்: சம்பந்தப்பட்ட இலாகா அமைச்சரைக் கேட்கவேண்டும்.

Meenakshipet Co-operative Lift Irrigation Society

* 29 *Q.*—SRI S. K. SAMBANDHAN: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether any subsidy or grant has been sanctioned for the Meenakshipet Co-operative Lift Irrigation Society in South Arcot district;

(*b*) if so, the date of sanction of the grant; and

(*c*) the date of disbursement of the amount?

கனம் திரு. எஸ். எம். ஏ. மஜீத்: (அ) துளைக்கிணறு தோண்டி, எண்ணெய் இஞ்சின் பம்பு செட் ஒன்றை நிறுவ இச் சங்கத்திற்கு 14,625 ரூபாய் கடனும், 4,875 ரூபாய் உதவித் தொகையும் அளிக்கப் பட்டன.

(ஆ) 22—11—1960-ல் கிராம வளர்ச்சி நிர்வாகத் துறையில் வெளியான 989-ம் எண் அரசாங்க ஆணையில் இவ்வுதவி அனுமதிக் கப்பட்டது.

(இ) கடன் தொகை 28-9-1962-ல் வழங்கப்பட்டது. உதவித் தொகை 22-3-1965-ல் வழங்கப்பட்டது.

திரு. எஸ். கே. சம்பந்தன்: இந்தக் கடன் தொகை அனுமதித்த தேதிக்கும் பணம் பட்டுவாடா செய்யப்பட்ட தேதிக்கும் வருஷக் கணக்கில் இடைவெளி இருந்தது என்பது அமைச்சர் அவர்கள்

a Printed as Appendix II on pages 138–139.

[2nd August 1965

சொல்லிய பதிலிலிருந்து தெரியவருகிறது. இதற்குக் காரணம் என்ன என்று சொல்வார்களா ?

கனம் திரு. எஸ். எம். ஏ. மஜீத் : *1960-ல் அந்தத் தொகை சாங்ஷன் செய்யப்பட்டிருந்தாலும் 1962-ம் வருஷக் கடைசி வரையில் சொஸைடி அதைப் பயன்படுத்தவில்லை. அதற்குப் பிறகுதான் சப்சிடி பிரச்னை வந்தது. Accountant-General க்கு refer செய்த பிறகுதான் கவர்ன்மெண்ட் உத்தரவிட்டு பணத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.*

திரு. எஸ். கே. சம்பந்தன் : சாதாரணமாக இதுபோன்ற கூட்டுறவு சங்கங்களுக்கு கடன் உதவுவதற்கு அரசாங்கம் அனுமதி கொடுக்கிறதே தவிர, அரசாங்கத்தில் உள்ள அலுவலர்கள் கொடுக்கும் சிரமங்களும் தொந்திரவுகளும் அதிகமாக இருக்கின்றன. அதனுல்தான் இந்தக் காலதாமதம் ஆனது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அதற்குப் பரிகாரம் செய்யப்படுமா ?

கனம் திரு. எஸ். எம். ஏ. மஜீத் : Irrigation சம்பந்தப்பட்ட கிணறுகள், பம்ப் செட்டு இவையெல்லாம் Technical people சொல்லவேண்டியது. சம்பந்தப்பட்ட கூட்டுறவு டிபார்ட்மெண்டுதான் சாங்ஷன் செய்யவேண்டியது. இதில் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. இரண்டு வருஷ காலத்திற்குள் கடன் தொகையை சொஸைடியார் பெற்றிருந்தால் இவ்வளவு காலதாமத்திற்கு இடம் இருந்திருக்காது, என்று சர்க்கார் கருதுகிறது.

திரு. எஸ். கே. சம்பந்தன் : இந்தக் தொகை கூட சட்டமன்றத்தில் 19[illegible]12-1964-ல் கேள்வி கேட்கப்பட்டதற்குப் பிறகு அளிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கேள்வி கேட்டதால்தான் அது கொடுக்கப்பட்டதே தவிர இல்லாவிட்டால் அந்த இலாகா கொஞ்சம் கூட இதில் சிரத்தை எடுத்து இருக்காது என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வதோடு, 12-12-1964-ல் கேட்ட கேள்விக்கு இப்போதுதான் அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறுர்கள் என்பதை தலைவர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எதிர்காலத்திலாவது இதற்குப் பரிகாரம் தேட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் திரு. எஸ். எம். ஏ. மஜீத் : அபிப்பிராயத்திற்கு நன்றி.

Pablo Boats

* 30 *Q*.—Sri M. ETHIRAJULU : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(*a*) the number of Pablo Boats manufactured in the State during 1962–63 and 1963–64 ;

3–20 p.m. (*b*) the number of Pablo Boats supplied to the fishermen in the districts of South Arcot, Ramanathapuram and Kanyakumari during the above period; and

(*c*) the basis on which the Pablo Boats are given to fishermen?